இரயில்வே திருத்தச் சட்டம் 2024 மீதான விவாதம்!

# சரக்கு ரயில்களின் வேகம் கூட்டப்பட வேண்டும்!

## மக்களவையில் - தங்கதமிழ்ச் செல்வன் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 7–

மக்களவையில் கழக உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் பேசியதாவது:–

முதலில், புதிய குற்றவியல் சட்டம் மற்றும் விமானச் சட்டம் போன்ற வற்றை சமஸ்கிருதத்தில் மாற்றியது போல் இந்த சட்டத்தின் பெயரையா வது மாற்றாமல் இருந்ததற்கு ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இந்த உரையை துவங்குகிறேன்.

**இரயில்வே திருத்த சட்டம் 2024, நோக்கம்:**

இரயில்வே வாரியச் சட்டம் (Railways Board Act), 1905, இரயில்வே சட்டம் (Railways Act), 1989 ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து சட்டக் கட்டமைப்பை எளிமைப்படுத்துவதே இந்த மசோதாவின் முக்கிய நோக்க மாக காணப்படுகிறது.

**தமிழ் மொழி பேசும் ஊழியர்கள்:**

இந்த மசோதாவில் அத்தியாயம் 1Aவில் இரயில்வே வாரியம் (Railway Board) பற்றி கூறப்பட்டுள்ளது. இதில் தலைவர், செயலாளர், மேலா ளர்கள் மற்றும் பிற பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம் ஒன்றிய அர சுக்கு மட்டுமே உள்ளது. இதில் எனது கோரிக்கை என்னவென்றால், அந்த அந்த இடத்திற்கு ஏற்ப அந்த பகுதி யில் பேசும் மொழி தெரிந்த பணியா ளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தென்னக இரயில்வே பெரும்பாலும் தமிழகம் மற்றும் கேரளாவை உள்ள டக்கியதால், தென் மண்டல பொது மேலாளர் தமிழ் அல்லது மலையாளம் தெரிந்தவராக இருக்க வேண்டும். டிக் கெட் கவுண்டரில் உள்ள பணியாளர் களுக்கும் கூட தமிழ் மொழி தெரிந் திருக்க வேண்டும். இதே போல் இந்தியாவின் அனைத்து பகுதிகளி லும் செய்யப்பட வேண்டும்.

அடுத்ததாக, சரக்கு ரயில்கள் தற் போது மணிக்கு 35 Kms வேகத்தில் தான் செல்கின்றன. இதை 70 Kms ஆக உயர்த்தினால் சரக்குகள் விரை வாக சென்றடையும். இது நாட்டிற்கு கூடுதல் வருவாயை ஈட்டித்தரும்.

**திண்டுக்கல் to சபரிமலை இரயில் பாதை:**

டிக்கெட் கட்டணம் மிகவும் குறை வாக உள்ளதால் இரயில்வே நஷ்டத் தில் இயங்குவதாகவும் வருவாய் இல்லை என்றும் ஒன்றிய அரசு கூறு கிறது. ஆனால் சரக்கு இரயில்களின் வேகத்தை அதிகரிப்பது போலவும், திண்டுக்கல் முதல் சபரிமலை வரை புதிய இரயில் பாதை அமைப்பது போன்ற திட்டங்களையும் செயல்படுத் தினால் உச்சகட்ட காலத்தில் ஒரு கோடி பக்தர்களும், மாதந்தோறும் லட் சக்கணக்கான மக்களும் பயணிப்பார் கள். மேலும் இந்த பாதை விவசாய நிலமான தேனியை கடந்து செல்வ தால், பல்வேறு விளைபொருட்களின் போக்குவரத்திற்கும் உதவும். இது போன்ற திட்டங்களால் இரயில்வே யின் வருவாய் உயரும், மக்களும் பயனடைவார்கள்.

மேலும், எனது தொகுதியில் உள்ள சோழவந்தான் போன்ற இடங்களில் இரயில் நிறுத்தம் அமைத்தால், போக்குவரத்து சிரமத்தால் அவதிப்படும் அப்பகுதி மக்கள் பயனடைவார்கள். இரயில்வேக்கும் வருவாய் கிடைக்கும்.

அதுபோல ஈரோடு to பழனி புதிய ரயில் பாதை மற்றும் காட்பாடி ரயில் நிலைய மறுசீரமைப்பு, பெர்மாபலூர் ரயில் பாதை போன்ற முக்கிய உள்கட டமைப்பு திட்டங்கள் தாமதம் மற்றும் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாத தால் பாதிக்கப்பட்டு, இணைப்பு மற் றும் பயணிகள் அனுபவத்தில் தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இது போன்ற திட்டங்கள் இரயில் வேயின் வருவாயை அதிகரிக்க செயல்படுத்தப்பட வேண்டும்.

Kavaach System: அடுத்ததாக, இந்தியா முழுவதும் கவச் (தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு) நிறுவ ஒன்றிய அரசு 800 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. ஆனால் இது சரியாக செயல்படுத்தப்படவில்லை. ரயில் விபத்துகளை தடுக்க கவச் அமைப்பை எல்லா இடங்களிலும் நிறுவ வேண் டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**இரயில்களின் பெயர்கள்:**

காங்கிரஸ் ஆட்சியில் பாண்டியன், சேரன், சோழன், பொதிகை என ரயில் களுக்கு பெயர் வைத்தனர். ஆனால் இந்த பாஜக அரசு வந்தே பாரத், நமோ பாரத், தேஜஸ் என பெயர் வைப்பது அந்த அந்த பகுதியில் பேசும் மொழி களுக்கும் மாநிலங்களுக்கும் முக்கியத்துவம் தராததை காட்டுகிறது.

**பெண் ரயில் ஓட்டுநர்களின் நலன்:**

மக்கள் பொதுத்துறை மற்றும் பொதுச்சேவைகள் ஆணையம், பெண் ரயில் ஓட்டுநர்கள் குழந்தை பிறப்புக்கு பின் ஆறு மாதங்களில் பணிக்குத் திரும்ப வேண்டிய நிலை மற்றும் மாதவிடாய் விடுப்பு மறுக்கப் படுவது குறித்த கவலைகளை எழுப்பி யது. தமிழக முதல்வர் அரசு ஊழியர்க ளுக்கு 1 வருடம் மகப்பேறு விடுப்பு அளித்துள்ளது அதை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசும் இது போன்ற திட்டங்களை மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

16 மணி நேர பணிக்குப் பின் 30 மணி நேர தொடர்ச்சியான ஓய்வு வேண்டும் என்ற கோரிக்கை மற்றும் ரயில் ஓட்டுநர்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம், வாரத்திற்கு 48 மணி நேரமாக பணி நேரத்தைக் குறைக்க பரிந்துரை.

**தண்டவாள பராமரிப்பு:**

2022ஆம் ஆண்டு தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) அறிக்கையின்படி, 20 சதவீதத்திற் கும் அதிகமான ரயில் தண்டவாளங் கள் அவற்றின் வடிவமைப்பு ஆயுட்கா லத்தை தாண்டியுள்ளன, இது ரயில் தடம் புரள்வதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. இதை கருத்தில் கொண்டு சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**மண்டலங்களுக்கு சுயாட்சி:**

இறுதியாக, இந்த மசோதாவில் இரயில்வே வாரியச் சட்டம் 1905, இர யில்வே சட்டம் 1989 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சட்டக் கட்டமைப்பை எளிமைப்படுத்தியுள்ளீர்கள். இதில் எனது பரிந்துரை என்னவென்றால், மண்டலங்களுக்கு(Zones) தன்னாட்சி வழங்க வேண்டும். அவர்களை சுதந் திரமாக முடிவெடுக்க விடுங்கள். இது உள்ளூர் தேவைகளை புரிந்து கொள்ளவும், கோரிக்கைகளை நிறை வேற்றவும் உதவும்.

இவ்வாறு அவர் பேசினார்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தாலுகா முடிக்கரை யில் மரணம் அடைந்த கழக முன்னோடி செல்லையா வின் உடலுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் காளையார் கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் யோக கிருஸ்ணகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூரில் ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பின் தென் மண்டல ஆய்வுக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர்கள் திருமதி கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் பங்கேற்பு!

தூத்துக்குடி, டிச. 7-

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் தென் மண்டல ஆய்வு கூட்டம் இன்று 7. 12 .2024 சனிக்கி ழமை காலை 10 மணி அள வில் திருச்செந்தூர் ஐ. .எம். ஏ .மகாலில் நடைபெறுகி றது. மாநில ஆதிராவிடர் குழு செயலாளர் ஆ.கிருஷ் ணசாமி எம்.எல்.ஏ. தலை மையில் முன்னாள் எம். எல்.ஏ. எஸ். மாரியப்பன் கென்னடி ,மருதூர் ராம லிங்கம் ,புஷ்ப ராஜ் ,திப் பம்பட்டு ஆறுச்சாமி, வி . து ரை ச் சா மி , மாவட்ட ஊராட்சி தலை வர் தசரதன், மு.பரமானந் தம் சா.ராஜேந்திரன், பி.டி.சி.ராஜேந்திரன், தேனி. முனியாண்டி, மு.முத்துராசு, மா .முருகே சன், ஜோசப், எஸ் .ஆறுமு கப்பெரு மாள், வை. மு. ராமஜெயம், கே. மாட சாமி, சி.எஸ்.ஏ.ராஜா, அலெக்ஸ் பிரிட்டோ, பிரம்மசக்தி, கா .சந்திரசே கரன், வி. முருகேசன், வீ.காசி விஸ்வநாதன், எ. இளையராஜா, கே.சுரேஷ் காந்தி வி.நவீன்குமார் ஆகி யோர் முன்னிலையில் நடைபெறுகிறது. முன் னாள் எம்.எல்.ஏ. மாநில ஆதிராவிடர் நலக்குழு இணைசெயலாளருமான வி.பி.ராஜன் வரவேற்று பேசுகிறார். இந்த ஆய்வு கருத்தரங்கில் கழக துணை பொதுச் செயலாளர் கனி மொழி கருணாநிதி எம். பி.அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், திருமதி கீதாஜீவன், எம்.எல்.ஏக் கள் சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன் மேயர் எம்.பி.ஜெகன், மாநகர செயலாளர் எஸ்.ஆர். ஆனந்த் , அனிதா ஆனந்த், மகேஸ்வரன், எஸ். ஆர். எஸ். உமரிசங்கர், முன் னாள் எம்.எல்.ஏ. டேவிட் செல்வன், டாக்டர் வெற்றிவேல், ஏ.பி. ரமேஷ், ஆர். சிவா ஆனந்த், ஆர் வான் சுடலை மற்றும் நிர்வாகி கள் கலந்து கொள்கிறார் கள். மாவட்ட ஆதிதிராவி டர் நலக்குழு துணை அமைப்பாளர் ஆர்.சுரேஷ் குமார் நன்றி கூறுகிறார்.

ஆய்வு கருத்தரங்கு விழா ஏற்பாடுகளை முன் னாள் எம்.எல்.ஏக்கள். தென்மண்டல பொறுப் பாளர்கள் வி.பி .ராஜன் எஸ்.மாரியப்பன் கென்ன டிமற்றும்விழாக்குழுவினர் செய்து வருகிறார்கள்.

மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் ஆர்.கே.திலீப்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# முதுகுளத்தூரில் கழக மருத்துவ அணி சார்பில் மாபெரும் கட்டணமில்லா மருத்துவம் - கண் சிகிச்சை முகாம்!

## மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் துவக்கி வைத்தார்!

இராமநாதபுரம், டிச. 7-

முதுகுளத்தூரில் துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதய நிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. மாநில மருத்துவர் அணி சார்பில் நடைபெற்ற கட்டண மில்லா பொது மருத்துவ மற்றும் கண் சிகிச்சை முகா மில் 4000 பேர் பங்கேற்று பயனடைந்தனர்.

முதுகுளத்தூர் அரசு கல் லூரியில் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட் சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். தி.மு.க. மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் மருத்துவர் திலீப் ராஜ கண்ணப்பன் முன்னிலை வகித்தார்.

இந்த முகாமில் பொது மருத்துவம், கண் சிகிச்சை, நரம்பியல், நுரையீரல், சர்க் கரை நோய், பல் மருத்து வம், முகப்பேறு மற்றும் பெண்கள் மருத்துவம், எலும்பு முறிவு, சிறுநீர், இரத்த பரிசோதனை, இ. சி.ஜி.பரிசோதனை, உள் ளிட்ட பல்வேறு பரிசோத னைகள் மற்றும் சிகிச்சை ஆலோசனை நடை பெற்றது.

பரிசோதனையில் நோய் கண்டறியப்பட்டவர்க ளுக்கு மேல் சிகிச்சைக்காக தேவைப்படுவோர் மருத்து வமனைகளில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டது. இது போன்று மருந்து மாத்திரைகள் கட்டணமில்லாமல் வழங் கப்பட்டது இந்த முகாமில் பொதுமக்கள் 4000 பேர் பங்கேற்று பயனடைந்த னர்.

இதில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சிவகங்கை, ராமநா தபுரம் மாவட்டத்தில் உள்ள முன்னணி மருத்துவ மனையின் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சிறப்பு நிபுணர்கள் கலந்து கொண்டு பரிசோதனை செய்தனர். மேலும் மாவட்ட பொதுமக்கள் நலன் கருதி முகாம் நடக் கும் அரசு கல்லூரிக்கு பல் வேறு பகுதிகளில் இருந்து கட்டணம் இல்லாமல் பஸ் வசதி செய்யப்பட்டது. பொது மக்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.

இந்த முகாமில் முன் னாள் அமைச்சர் சத்திய மூர்த்தி, ராமநாதபுரம் சட் டமன்ற தொகுதி பார்வை யாளர் சுதர்சன், முது குளத் தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வேல்முரு கன், முதுகுளத்தூர் பேரூ ராட்சி சேர்மன் ஷாஜகான், ஒன்றிய செயலாளர்கள் ஆறுமுகவேல், பூபதிமணி ஜெயபாலன், குலாம் முகை தீன், கோவிந்தராஜன், சண் முகநாதன் மற்றும் அமைச் சர் ராஜகண்ணப்பன் நேர்முக உதவியாளர் கண் ணன், முதுகுளத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலக உதவியாளர்கள் சக்தியேந்தி ரன், தோனி, ரஞ்சித் மணி கண்டன் கலந்து கொண்ட னர்.

சிவகங்கையில் சிவகங்கை மாவட்ட கழக துணைச் செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து திருஉருவப்பட திறப்பு!

## அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்கை, டிச.7-

சிவகங்கை மாவட்ட கழக துணை செயலாளரும் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவரும், முன் னாள் சிவகங்கை நகர் மன்ற துணை தலைவராக இருந்த வர் கே.எஸ்.எம்மணிமுத்து. இவர் கடந்த ஆகஸ்டு மாதம் 15ம்தேதி மறை வெய்தினார். இவரது பட திறப்பு விழா சிவகங்கை மாவட்ட திமுக மற்றும் நகர் கழகத்தின் சார்பில் தனியார் திருமண மண்ட பத்தில் நகர் கழகச் செயலா ளர் சி.எம்.துரை.ஆனந்த் தலைமையில் நடை பெற்றது.

கே.எஸ்.எம்.மணிமுத்து வின்திருவுருவப்படத்தினை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரியக ருப்பன் திறந்து வைத்து மல ரஞ்சலி செலுத்தினார்.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் திருமதி மலர்வி ழிமணிமுத்து சகோதரி செந்தா மற்றும் மணிமுத்து வின் உறவினர்கள் கலந்து கொண்டார்கள் .

இந்த நிகழ்ச்சியில் முன் னாள் அமைச்சர் மு.தென் னவன்,திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ .மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன், வழக்கறிஞர்கள் ஆதி .அழகர்சாமி, துசாந்த் பிரதீப்குமார் மாவட்ட தொண்டரணி அமைப் பாளர் சுப.சண்முகநாதன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ். அருணாச்சலம் மாவட்ட இளைஞரணி அமைப்பா ளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது,அமைப்பா ளர் சிங்கமுத்து , முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலை வர் எம்.ராஜரத்தினம், ஆகி யோர் புகழஞ்சலி சேர்த்தி னார்கள்.

இந்த நிகழ்ச்சி யில்முன்னாள் எம்.எல்.ஏக் கள் சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி ,நக ரக் கழகச் செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, என். குணசேகரன், ஒன்றிய கழ கச் செயலாளர்கள் எம் . ஜெயராமன், திருமலை முத் துராமலிங்கம் ,வே.ஆரோக் கியசாமி, துரைராஜா மணி, நா.நெடுஞ் செழியன், யோக. கிருஷ்ணகுமார், எம் .அண்ணாதுரை, வே. தமிழ்மாறன் ,நகர்மன்ற துணைத் தலைவர் எம் .கார் கண்ணன் ,மானாமதுரை ஒன்றிய குழு துணை தலை வர் முத்துசாமி, ஒன்றிய கழக நிர்வாகிகள் துணைச் செயலாளர் முத்துக்குமார் நிர்வாகிகள் வீனஸ் ராமநா தன், ஜெயகாந்தன், சேகர் விஜயகுமார், மு.முரு கேசன், மதியழகன்,மதார், அ.ஆயூப்கான். அழகுசுந்த ரம், மாவட்ட மகளீரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் , நிர்வா கிகள் மார்கரெட்கமலா, திலகவதி கண்ணன் , பாக்கியலட்சுமி, மஞ்சுளா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்கு மார்,சன் சீமான்சுப்பையா, சோமசுந்தரம் உட்பட மாவட்டம் முழுவது மிலிருந்து திமுகவினர் மற் றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி முடிவில் 1000த்திற்கும் மேற்பட்ட வர்களுக்கு வேட்டி, சேலை கள், இஸ்திரி பெட்டி கள்,தையல் இயந்திரம் ஆகியவற்றை அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன், திருமதி மலர்விழி மணி முத்து ஆகியோர் வழங்கி னார்கள்.

புயலால் பாதிக்கப்பட்ட

# 3 மாவட்டங்களில் தேர்வு ஒத்திவைப்பு!

## ஜன. 2ல் தொடங்குகிறது!

சென்னை, டிச. 7 –

ஃபெஞ்சல் புயல் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களில் அரையாண்டு தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அங்கு, ஜனவரி 2ம் தேதி முதல் 10ம் தேதி வரை அரையாண்டுத் தேர்வுகள் நடத்தப்படும் என பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஃபெஞ் சால் புயலின் மழை வெள்ளத்தால் கடலூர், விழுப்புரம், திருவண்ணா மலை மாவட்டங்களில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு, பள்ளி மாணவர்களின் நலன்கருதி அரையாண்டுத் தேர்வுகளை இம்மாவட் டங்களில் மட்டும் ஒத்தி வைக்கப்படு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 3 மாவட்டங்களிலும் வரும் ஜனவரி 2 முதல் 10ம் தேதிக்குள் அரையாண்டுத் தேர்வுகளை நடத்திட வும், இதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளவும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. மழை நீர் வடிந்த பிறகு முறையாக பள்ளி திறக்கும்போது 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக் கான செய்முறைத் தேர்வுகளை நடத்தி டவும், அனைத்து வகுப்புகளுக்கும் பாடங்கள் ஏதேனும் முடிக்கப்படாமல் இருந்தால் அதனை முடித்திடவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ந. சண்முகம்**
**டிசம்பர் 7 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தொண்டர் படையில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பல ஆண்டுகள் தொடர்ந்து கிளைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருநரையூர் ஊராட்சி மன்றத் தலைவர், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சித்தமல்லி ந.சோமசுந்தரம்**
**டிசம்பர் 7 (2022)**



இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.